بسم الله الرحمن الرحيم

**FRIDAY SERMON**

**வெள்ளிக்கிழமை குத்து:பா 28-02-2014**

*(27 Rabi'ul Aakhir 1435 Hijiri)*

# ISLAM IS A WAY OF PEACE

# இஸ்லாம் சமாதானத்தின் வழியாகும்

## *Hazrat Halifathullah Munir Ahmad Azim (A)*

உலக மக்கள் அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வா ரஹ்மத்துல்லாஹி வாபறகாத்துஹு தெரிவித்த பிறகு ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் தஷஹ்ஹுத்தும் தஅவ்வுசும், சூராபாத்திஹாவும் ஓதி இவ்வாறு கூறினார்.

சமீபகால பத்திரிகை வழியாகவும் மற்றும் செய்திகள் மூலமாகவும் நாம் புரிந்துகொண்டது, ஆப்பிரிக்கா முஸ்லீம்கள் குறிப்பாக மத்திய ஆப்பிரிக்காவை சார்ந்த முஸ்லீம்கள் மற்று மத தீவிரவாதிகளுடையவும் எதிராளிகளுடையவும் கைகளால் இரையாக்கப்படுகின்றன என்பது. ஏனைய மத தீவிரவாதிகள் இஸ்லாமையும் முஸ்லீம்களையும் என்ன விலைக்கொடுத்தும் அழித்திட முன்வந்திருக்கின்றார்கள். அவர்களின் நோக்கம் வெற்றியடைவதற்கு எந்த எல்கைவரை செல்லவும் அவர்கள் தயாராகயிருக்கிறார்கள். காரணம் இஸ்லாமையும் அதன் போதனைகளையும் ஒரு சாபமாக அவர்கள் எண்ணுகின்றார்கள் என்பதாகும். (இறைவன் இரட்சிப்பானாக).

ஆகவே இன்று சமாதானத்தையும் சாந்தியையும் அடிப்படையாக்கிக் கொண்டு உரையாற்ற நான் எண்ணுகின்றேன். இது மனிதமனசாட்சிக்கான ஒரு வேண்டுகோளாகும். முன் காலமதங்களோடும் சமகால மதங்களோடும் போர்செய்வதற்காக தோன்றிய ஒரு மதமல்ல இஸ்லாம். ஒரு பொழுதும் முடிந்து விடாமல் என்றென்றும் நிலைநிற்கும் உண்மையின் ஊற்றை இஸ்லாம் ஏற்றுக்கொள்கின்றது. கடந்த காலங்களிலாகும் அந்த ஆன்மீக நதியின் ஊற்று உருவானது. நூற்றாண்டுகள் வழியாக அந்த ஆன்மீக சீற்றம் வளர்ந்து வலுமைப் பெற்று முடிவில் அதன் சமயம் எட்டிய போது இறைவனிடமிருந்து உறுதிவாய்ந்த தீர்வு வந்தது.

**"இன்று நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன். மேலும், உங்களுக்கு என் அருள்களை நிறைவு செய்துள்ளேன். மேலும் உங்களுக்கு மார்க்கமாக இஸ்லாத்தை தேர்ந்தெடுத்துள்ளேன்"** (5-4).

இஸ்லாமிற்கு முன்பு தோன்றிய அனைத்து மதங்களுடையவும் தேவையான உண்மைகளை திருகுர் ஆன் ஒருபொழுதும் மறுக்கவுமில்லை, புறக்கணித்து விடவுமில்லை. மாறாக அந்த உண்மைகளை திரு குர்ஆன் வசனமாக உட்படுத்திக் கொள்ளவும் அதை வெளிப்படையாக கூறவும் செய்கின்றது. இது மூலம் அம்மதங்களின் தூய்மையை பாதுகாப்பதற்கு முடிகின்றது என்று மட்டுமல்லாமல் நூற்றாண்டுகள் வழியாக அதில்

நுழைந்துவிட்ட இறைவசனங்களுக்கு மாறான கருத்துக்களை பகுத்தறியவும் இயலுகின்றது. சுதந்திரவும் பொய்மையற்றதும், நிஜம் வாய்ந்ததுமான இந்த அங்கீகாரத்தையும் கடந்தகால மதங்களுடையவும் இறைவெளிப்பாடுகளுடையவும் உண்மையையும் திருமறை மிக தெளிவாக கூறுகின்றது.

**“ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் இறைவனிடமிருந்து அனுப்பப்பட்ட வழிகாட்டி ஒருவர் உண்டு”.** (13-8).

**“எச்சரிக்கை செய்பவர் எவரொருவரும் வராத எந்த சமுதாயவும் இல்லை”** (35-25).

உலகமதங்களுக்கு நிகரற்றதும், வனப்பு வாய்ந்ததுமான ஒரு தனிச்சிறப்பையே இஸ்லாம் வழங்கியுள்ளது. கடந்த நூற்றாண்டில் காதியானில் மஸீஹாக தோன்றிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அ) அவர்கள் இந்த உண்மையை நிரூபித்துவிட்டார். கவலையின்றி அதை உணர்ந்து கொள்ள மக்களுக்கு முடிகின்றது. உதாரணமாக, அன்னார் கூறுகின்றார், **“ஏது நாட்டைச் சார்ந்த வழிகாட்டிகளாக இருந்தாலும் சரி, அவர்களின் போதனைகள் நீண்ட காலமாக நிலைநின்று வருகின்றதுயென்றால், நிச்சயமாக அவர்கள் இறைவனால் நியமித்தவர்களே ஆவார்கள். காரணம், அல்லாஹ் பொய்யாளர்களுக்கு ஒரு பொழுதும் வெற்றியை வழங்கமாட்டான் என்பது விதிக்கப்பட்ட விஷயமே ஆகும்”.**

ஸ்ரீ புத்தனுடையவும், ஸ்ரீ கிருஷ்ணனுடையவும், ஸ்ரீ ராம சந்திரனுடையவும் போதனைகள் இறை ஊற்றில் இருந்து உருவானதேயாகும் என்ற அஹமது(அ)மின் கூற்று முற்றிலும் இவ்விஷயத்தை உறுதிப்படுத்துகின்றது. அன்னாரின் நூல்களில் மதத்தலைவர்களை மிக கண்ணியப்படுத்தி கூறியிருக்கின்றார். இந்த மகாத்துமாக்களின் உண்மையான பாடங்கள் காலகட்டத்தின் ஒழுக்கில்பட்டு ஏராளமான மாற்றங்கள் ஏற்பட்டது என்ற உண்மையை அன்னார் மறுத்துவிடவில்லை. அவர்களின் முதன்மையான போதனைகளின் அடிப்படை ஏக இறைகொள்கை என்பதில் சந்தேகமில்லை. முழுமைப் பெற்றவனும், ஆற்றலுடையவனுமாகிய அல்லாஹ்வை வணங்குங்கள் என்ற தத்துவத்தின் அடிப்படையிலாகும் ஒவ்வொரு வெளிப்பாடு மதங்களுடையவும் தோற்றம். இந்த அடிப்படை தத்துவத்தில் இருந்தே எல்லா ஆன்மீக உண்மைகளும் நல்லொழுக்க சட்டங்களும் உற்பத்தியானது. முஹமது முஸ்தபா (ஸ) அவர்கள் தனது காலயளவில் ஒரு நகரசந்திப்பை எட்டியதாக உணர்ந்து கொண்டு, தான் நிற்கும் இந்த இடம் எல்லா இறைமதங்களுடையவும் சங்கம இடம் என்று புரிந்து கொள்ளவும் செய்தார். அன்னார் மதீனாவை சென்றடைந்ததற்கு பிறகு புதிதாக தோன்றிய இஸ்லாம் அமைப்பு கடினமான துன்பங்களை நேரிடுகின்ற ஒரு நிலை என்று பகுத்தறிந்தார். பலதரப்பட்ட மத நம்பிக்கையாளர்கள், பல்வகையான அரசியல் நோக்கங்கள், மேல்மட்ட கீழ்மட்ட வர்க்கத்தினர்களின் இடையிலான போராட்டங்கள். இந்த சூழ்நிலையில் தூய தூதர் (ஸ) அவர்கள் முதலாக இம்மண்ணில் சமாதானத்தை நிலை நாட்டவே முயற்சித்தார். ஒரு ஒலீவு மரத்தின் கிளையை பிடித்துக்கொண்டு திரு நபி(ஸ) மக்களை நோக்கி கூறினான்.

**“நீர் கூறுவீராக! வேதத்தையுடையவர்களே, எங்களுக்கும் உங்களுக்கும் இடையில் ஒன்றுபட்ட ஒரு கருத்தின்பால் வாருங்கள் (அதாவது) நாம் அல்லாஹ்வையன்றி**

**வேறொருவரையும் வணங்கமாட்டோம். அவனுக்கு வேறு எதனையும் இணைவைக்கமாட்டோம். அல்லாஹ்வை விட்டு விட்டு நம்முள் சிலர் வேறு சிலரை கடவுளாக ஆக்கிகொள்ளமாட்டோம்''** (3-65).

தூயதூதர் முஹமது(ஸ) வின் இந்த பரிசுத்தமான அழைப்பு அதாவது ஏகனாகிய இறைவனை வணங்குங்கள் என்று எவர்களை குறிப்பிட்டு அன்னார் கூறினாரோ அது வீணாகிவிடவில்லை. மிக குறைந்த காலங்களுக்குள் அரேபியாவின் அனைத்து வரம்புகளையும் தாண்டி ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும், ஐரோப்பியாவிலுமுள்ள ஆயிரகணக்கான மக்கள் நூற்றாண்டுகள் வழியாக இந்த பரிசுத்தமான அழைப்பை ஏற்றுக்கொண்டார்கள்.

இஸ்லாம் நம்பிக்கை, அனைத்து மக்களையும் மிக நல்ல நிலையில் ஒன்றிணைக்கின்றது. அது எவரையும் வேறுபடுத்தவில்லை. மனித வரலாற்றில் மிக தேவையும் முக்கியத்துவவும் வாய்ந்த ஒரு காலகட்டத்தில் இறைவனின் ஏகத்துவத்தை நிலைநாட்டிக்கொண்டு, கிழக்கையும், மேற்கையும் அது ஒன்றிணைத்தது கொண்டது என்பது இஸ்லாமின் மிக சிறந்த அருள்களில் ஒன்றேயாகும்

ஐரோப்பாவிலும், பாரதத்திலும் இஸ்லாம் தேவையான ஒன்றாகவே இருந்தது. ஏக இறைகொள்கையின்பால் மக்களை அழைப்பதற்கும் அவர்களின் அறியான்மையை நீக்கம் செய்வதற்கும் இஸ்லாம் அவசியமானதாகயிருந்தது. மக்களுக்கு உண்மையான பாதையைக் காட்டிக்கொடுப்பதற்கும் தவறுகளில் இருந்து அவர்களை இரட்சிப்பதற்கும் இஸ்லாம் அவசியமானதாகயிருந்தது. மக்களுக்கு உண்மையான பாதையை காட்டிக் கொடுப்பதற்கும் தவறுகளில் இருந்து அவர்களை காப்பாற்றி கொள்வதற்கும் இஸ்லாம் உதவிபுரிகின்றது. இஸ்லாமின் உண்மைக்காக மேலும் சான்றுகளை வழங்காதிருப்பது சரியல்ல. கேள்வி எழும்பாமல், ஏக இறைகொள்கை நிலைநிற்கும் ஒரு உலகுண்டு, அது சிந்தனைகளின் உலகமே ஆகும் என்பது நம்மை அற்புதப்படுத்தும் விஷயமாகும். கடந்த வெள்ளிகிழமை எனது உரையில் நான் விளக்கியது போன்றே இந்த மக்கள் இஸ்லாமை ஒத்துக்கொள்கின்றார்கள். திருகுர் ஆனின் போதனைகளையும் உண்மையான நிலைகளையும் அதன் செயல்முறைகளையும் அவர்கள் உட்கொள்கின்றார்கள். ஆனால் உண்மையின்பால் நெருங்கி கொள்ளும் போது அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நடிக்கின்றார்கள். அவர்களின் நாடுகளின் சட்ட அமைப்பு பணிகளுக்காக திருகுர் ஆனின் சட்டதிட்டங்களை எடுத்து, அதை நடைமுறைப்படுத்திக்கொள்கின்றார்கள். எல்லாம் வல்ல ஏக இறை நம்பிக்கையில் நின்றே, பரிபூரணவும் யுக்திவாய்ந்ததுமான மானிட ஒற்றுமை என்ற கருத்து உருவாகுவது. இஸ்லாமின் தூய தூதர் (ஸ) அவர்கள் நிகரற்ற அல்லாஹ்வைக் குறித்து நிரந்தரமாக மக்களிடத்தில் எடுத்து விளக்கி கொண்டிருந்தார். மனித சமூகம் அனைத்தும் அந்த நிகரற்ற இறைவனின் குடும்பத்தை சார்ந்தவர்களே ஆவார்கள். மனுக்குலம் அனைத்தும் சகோதர பந்தங்களால் தொடர்புடையவர்களே ஆவார்கள் என்ற மகத்தான கருத்தின்பால் அது நம்மை கொண்டு செல்கின்றது. தன்னை படைத்த உண்மையான ஏக இறைவனை மட்டும் வணங்குதல் என்பது ஒரு முஸ்லீமின் கடமையின் ஒரு புறம் என்றால், மறுபுறமாகட்டும் தனது சகோதரர்களாகிய

மானிட குலத்திற்கு தொண்டு செய்தல் ஆகும். தூய தூதர் நபி(ஸ)வை பொறுத்தவரையில் மனித ஒற்றுமை (சகோதரத்துவம்) என்பது கருத்திற்கு அடிப்படையான ஒரு கனவைவிட அதொரு வெளிப்படையான உண்மையாக புலனாக வேண்டும் என்று மிக நன்றாக புரிந்திருந்தார். அதனால் தனது நாட்டுக்குள் அதை முதன்மையாக அமல்படுத்திகாட்டிட அவர் விரும்பினார்.

அரபி கோத்திரங்களுக்கு இடையிலான கடினமான போராட்டங்களையும், பகைகளையும், குறைத்திடவும், பிறகு அவரையனைத்தும் ஒரு சமுதாயத்தில் உட்படுத்தி சகோதர பந்தத்தால் ஒன்றிணைத்திட வேண்டும் என்று தூய தூதர் முஹமது (ஸ) அவர்கள் எண்ணினார். அவரது இந்த முயற்சியில் நிச்சயமாக அல்லாஹ்வின் உதவி நிலை கொண்டிருந்தது. பரிசுத்த ஆன்மாவைக் கொண்டு அல்லாஹ் தூயதூதனுக்கு துணையேகிவிட்டான். தீர்மானித்ததின்படி திருநபி(ஸ) தனது பணிதுவங்கினார். வரலாறு கூறுகின்றது. மதபரமானதும் சமூகபரமானதும் அரசியல் பரமானதுமான ஒரு மாபெரும் புரட்சி அங்கு நிகழ்ந்தது. ஹஸ்ரத் முஹமது (ஸ) வுடைய வாழ்க்கை காலத்திற்குள் அங்கு இஸ்லாமிக சகோதரம் நடைமுறையில் வந்தது. இஸ்லாமிக சகோதரத்தை திருமறை இவ்வாறு தெரிவிக்கின்றது.

**“நீங்கள் யாவரும் ஒன்றுபட்டு அல்லாஹ்வின் பாச கயற்றினை உறுதியாக பற்றி பிடித்துக்கொள்ளுங்கள். மேலும் நீங்கள் பிரிந்து போய்விடாதீர்கள். உங்கள் மீது செய்துள்ள அல்லாஹ்வின் அருளை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் எதிரிகளாக இருந்தீர்கள். பின்னர் அவன் உங்கள் உள்ளங்களில் நட்பை உண்டாக்கினான். எனவே நீங்கள் அவனுடைய அருளினால் உடன்பிறப்பு போல் ஆகிவிட்டீர்கள். நீங்கள் ஒரு நெருப்பு கிடங்கின் ஓரத்தில் இருந்தீர்கள். பின்னர் அவன் உங்களை அவன் அதில் இருந்து காப்பாற்றினான். இவ்வாறே உங்களுக்கு தன் வசனங்களை நீங்கள் நேர்வழியினை பெறும் பொருட்டு விளக்குகின்றான்”** (3-104).

தூதுவ மன்னன் ஹஸ்ரத் முஹமது (ஸ)வின் வபாத்துக்கு பிறகு வந்த நான்கு கலீஃபாக்களும் , சிறப்பாக ஹஸ்ரத் உமர்(ர) அவர்கள் இஸ்லாமின் சகோதரத்தை மக்களிடத்தில் எடுத்து விளக்கி காட்டி கொண்டிருந்தார்கள்.

இந்த சொற்பொழிவை நான் இப்போது முடித்துக் கொள்கின்றேன். இஸ்லாமின் விளக்கை முறுகப்பிடிக்க முஸ்லீம்களாகிய நமக்கு அனைவருக்கும் முடிந்து விடட்டும். அதற்கு அல்லாஹ் உதவி புரிவானாக! மானிட சமூகத்திற்காக அல்லாஹ் தந்தருளியிருக்கின்ற இந்த நிகரற்ற உண்மையை உலக மக்கள் புரிந்து கொள்ளட்டும். இஸ்லாமை பரிகசிப்பதில் இருந்தும், முஸ்லீம்களை துன்புறுத்துவதில் இருந்தும் அவர்கள் விலகி கொள்ளட்டும். சமாதானத்துக்காக அவர்கள் முன்வரட்டும். இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

Translated by
**Azim Ahmad**
Sadr Sahibul Faraj
Kerala/ TamilNadu
E-mail: sahihazisulsat@gmail.com
Cell: 09789180817

Issued by R. Jamaludin Raother Amir (South Zone)
Jamaat Ul-SahihAl Islam, Kerala (Regd) India.
Email: jamal.raother@gmail.com
Web:www.jamaat-ul-sahih-al-islam.com
Phone: 09447001832